தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஐப்பசி 19, சுபானு—திருவள்ளுவர் ஆண்டு 2034

2003 நவம்பர் 5, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சூழாமல் தானே முடிவுவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு"

தம்மைச் சார்ந்த குடிகளை உயர்த்தும் செயல்களில் காலம் தாழ்த்தாமல் ஈடுபட்டு முயலுகிறவர்களுக்குத் தாமாகவே வெற்றிகள் வந்து குவிந்துவிடும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 41, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.*

41—

இலவச வீட்டுமனைப் பட்டா

***16661—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், எடக்குடி, வடபாதி ஊராட்சியிலுள்ள பகத்சிங் நகரில் வாழும் பழங்குடி இருளர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியத்தைச் சேர்ந்த வடபாதி கிராமம், பகத்சிங் நகரில் வசிக்கும் 30 இருளர் குடும்பங்கள் தற்போது வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் குடியிருந்து வருவதால் அந்த இடத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாத நிலையில் அருகிலுள்ள கொண்டத்தூர் கிராம புல எண் 47/4-ல் தருமபுரம் ஆதீனத்திற்குச் சொந்தமான கோயில் நிலத்தில் 0.40.5 எக்டேர் நிலம் கையகம் செய்யப்பட்டு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் நிலையில் மேற்படி நிலத்தை குத்தகைக்கு எடுத்திருந்த நபர்கள் எதிர்ப்பு தெரிவித்து வழக்கு தொடுத்துள்ளதால் வீட்டுமனைப் பட்டா வழங்குவது தாமதப்பட்டுள்ளது.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் அருகிலுள்ள எடக்குடி, வடபாதி ஊராட்சி, பகத்சிங் நகரில் எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் வசித்து வரும் மலைவாழ் இனமான இருளர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா இந்த ஆண்டிலேயே வழங்குவது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் குத்தகைக்கு எடுத்தவர்கள் தொடுத்த வழக்கை விரைவில் முடித்து வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 42, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.